Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.MC.No. 7/ 2023

**DEPOSITION OF RESPONDENT SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகேசன் | Calling: | கூலி |
| Father's Name: | விஸ்வநாதன் | Religion: | இந்து |
| Village: | மேல்குப்பம் | Age: | 40 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 05.09.2024

(எதிரி ஆஜர்.)

எ.ம.சா. 1 குறுக்கு விசாரணை

எனக்கும் மனுதாரருக்கும் இந்த வழக்கில் கூறப்பட்டுள்ளது போல் திருமணமாகி குழந்தைகள் இருப்பதும், தற்போது பிரிந்து வாழ்வதும் உண்மை தான். கடந்த 4 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். இந்த 4 வருடத்தில் மனுதாரரின் பராமரிப்பிற்கு நான் ஏதேனும் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. குழந்தை முதலில் என்னிடம் இருந்தது, பிறகு மனுதாரரிடம் ஒரு வருடம் இருந்தது. பிறகு மீண்டும் என்னிடத்திலேயே வந்து விட்டது. குழந்தை மனுதாரரிடம் இருந்த 1 வருடத்திற்கு குழந்தையை பராமரிப்பத்றகான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், மனுதாரருக்கும் இடையேயான பிரச்சனை சம்மந்தமாக இதுவரை எத்தனை முறை பேச்சுவார்த்தை நடந்திருக்கும் என்றால் 6 அல்லது 7 முறை நடந்திருக்கும். சார்பு நீதிமன்றத்தில் மனுதாருக்க எதிராக நான் தாக்கல் செய்துள்ள சேர்ந்து வாழக்கோரும் வழக்கிலும் மனுதாரர் இடைக்கால பராமரிப்பு தொகை கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவிலும் இதுவரை நான் எந்த தொகையையும் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

குழந்தை பிரச்சனை சம்மந்தமாக மனுதாரர் கொடுத்த புகாரின்பேரில் காவல்நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் எனது முதன்மை விசாரணையிலும், எதிர்மனுவிலும் மனுதாரர் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றாலும், மனுதாரர் அதற்கு பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றாலும் சரிதான். நான் மனுதாரரின் அறிவிப்பிற்கு பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நானும் மனுதாரரும் பிரிந்து வாழ்வதற்கு நானும் எனது குடும்பத்தாரும் தான் காரணம் என்றால் சரியல்ல. எனது குழந்தைக்கு மாதம் எவ்வளவு செலவாகும் என்றால் மாதம் ஐந்தாயிரம் அல்லது ஆறாயிரம் செலவாகும். அதற்கு வருமானம் எப்படி எனக்கு வருகிறது என்றால் ஏரி வேலைக்கும், கூலி வேலைக்கும் செல்வதால் வருகிறது.

எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் எனக்கு இல்லை. எனது அப்பாவிற்கு உள்ளது. நான் வியாபாரம், விவசாம் மற்றும் ஓட்டுநர் வேலை செய்வதின் மூலம் மாதம் ரூ.5,000 வரை சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரர் மற்றுத் குழந்தைகளுடன் சேர்ந்து வாழும்போது எங்கள் மூவருக்கும் மாதம் எவ்வளவு செலவாகியிருக்கும் என்றால் ரூ.5,000 ஆகியிருக்கும். ஏரிவேலைக்கான அடையாள அட்டையை நீதிமன்றத்தில் நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு உடல்நிலை சரியில்லாதது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். உழவர் சந்தையில் வியாபாரம் செய்தால் அதற்கு அடையான அட்டை வாங்கினார்கள் என்றால் சரிதான். மனுதாரர் உழவர் சந்தையில் வேலை பார்ப்பதாக கூறியுள்ளேன். அந்த அடையாள அட்டையை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் வட்டி தொழில் செய்கிறார் என்று கூறியுள்ளேன் என்றால் யார்யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தவாறன தகவல்களை கூறி எதிர்மனுவையும், முதல் விசாரணையையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரின் மனுபடி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) முருகேசன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D. Ravi,
Judicial Magistrate, Vaniyambadi.